மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், 32,000 குழாய்கள் செய்ய வேண்டியதில், 10,000 குழாய்கள் செய்து, நாலாயிரத்துக்கு மேற்பட்ட குழாய்கள் புதைக்கப்பட்டு, அந்தக் குழாய்கள் 'சப் ஸ்டாண்டர்ட்' என்று சொல்லி, கைவிடப்பட்டன. இது என்னுடைய நினைவு.

(திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா எழுந்தார்.)

இருங்கள். இன்னும் நான் உட்காரவில்லையே. (சிரிப்பு) எனவே இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டோம். குறிப்பாக, பின் யாரிவது தனியாக கேள்வி கேட்டால் அதற்குத் தகுந்த பதில் கொடுக்கப்படும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நிபுணர்கள் குழு (டெக்னிகல் பியூப்பிள்), கவர்னர் ஆட்சிக் காலத்தில் இதைப்பற்றிப் பரிசீலித்து, அறிக்கை கொடுத்தது? அதில் (டெக்னிகல் பீப்பிள்) தொழில் நுணுக்க முறையில் இந்தத் திட்டம் சாத்தியமானது என்று சொல்லியிருக்கிறதா என்று தான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் இந்த அரசு அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது.

செயற்கை மழை.

* 73. **வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா மற்றும் திரு. க. மீனாட்சி சுந்தரம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1983-ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் குடிநீர் பற்றாக் குறையைப் போக்க, சென்னை மாநகரிலும், சென்னை நகரைச் சுற்றிலும் செயற்கை-மழை பெய்யச் செய்ய எற்பாடுகள் செய்யப் பட்டன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(இ) சென்னை நகரில் முன் எப்போதும் இல்லாத அளவு குடிநீர் கட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால் நகர நீர்ப்பிடிப்பு நிலைகளான ரெட் ஹில்ஸ், பூண்டி மற்றும் சோழவரம் நீர்ப்பிடிப்பு பகுதிகள் மற்றும் நீலகிரியின் நீர்மின் நிலையங்கள் ஆகிய பகுதிகளில் மேகத்தை செயற்கை முறையில் குளிர்வித்து, மழையை அதிகரிக்கச் செய்யும் திட்டம் ஒன்றினை நிறைவேற்றுவதற்காக அரசு இத்துறையில் வல்லுனர்களான அட்மாஸ்ஃபெரிக்ஸ் இன் கார்பரேட்டட் என்ற அமெரிக்க நிறுவனத்தை பணியமர்த்தியது. இத்திட்டம் அக்டோபர் 7ஆம் தேதிவரை நடைபெற்றது. இத்திட்ட செலவுக்காக ரூ. 27 இலட்சம் மாநில அரசால் அனுமதி செய்யப்பட்டது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின், இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால், புற நகர்களில் எவ்வளவு மழை பெய்தது? போதுமான அளவுக்குப் பெய்ததா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால், 1983 ஆகஸ்ட் மாதம் அதிகமான மழை பெய்தது என்று புள்ளிவிவரம் இருக்கிறது. முழுமையான புள்ளிவிவரம் டிசம்பர் மாதத் திற்குள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். இன்னும் கிடைக்கவில்லை. அது கிடைத்தபின் கேள்வி கிடைத்திருந்தால், முழுமையாகப் பதில் கொடுத்திருக்க முடியும். இப்போது கொடுக்கக் கூடிய தகவல் எல்லாம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 27 இலட்சத்தில் ரூ. 26 இலட்சம் செலவாகியிருக்கிறது என்பதுதான். ஆகஸ்ட் மாதத்தில் சராசரி பெய்ய வேண்டிய மழையைவிட மும்மடங்கு பெய்திருக்கிறது. இன்னும் அதிகமான தகவல்கள் பெற அரசு விரும்புகிறது. முழுமையான கேள்வியாகக் கேட்டால், முழுமையான பதில் தரப்படும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அரசு செலவு செய்திருப்பது ரூ. 26 லட்சம். அதற்காக குறிப்பிட்ட பகுதியில் குறைந்த பட்சம் 2.6 மில்லி மீட்டர் மழையாவது பெய்ததா என்று திட்டவட்டமாக அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னேன். ஏற்கெனவே பெய்யும் என எதிர்பார்த்ததைவிட மும்மடங்கு மழை பெய்திருக்கிறது. இந்தத் தகவல்கள் மட்டும் போதும்

என்று அரசு கருதவில்லை. இந்த அவைக்கு நிரம்பத் தகவல் கொடுக்க வேண்டுமென்று அரசு நினைக்கிறது. முழுமையான கேள்வி கேட்டால்,

Full report, exhaustive ஆக தர அரசு தயாராக இருக்கிறது.

(முற்பகல் 9—40)

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்காக ரூ.26 லட்சம் செலவிடப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அதோடு ஆகஸ்ட் மாதத்தில் மும்மடங்கு மழை பெய்ததாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்துள்ளார்கள். அந்த மழை முழுவதும் இந்தத் திட்டத்தின் காரணமாகப் பெய்ததா? அல்லது வேறு காரணங்களால் பெய்ததா ? ரூ. 26 லட்சம் செலவு செய்த பிறகும், இந்தத் திட்டம் “ஒரு சக்சஸ்புல் எக்ஸ்பெரிமன்ட்” என்று அரசு கருதுகிறதா ? எனவே எதிர்காலத்தில், வளர்ச்சி ஏற்படக்கூடிய பிரதேசங்களில் இதைப் பின்பற்றலாம் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது மிகவும் ‘சக்சஸ்புல்’ திட்டம் என்று 1975 ஆம் ஆண்டிலேயே முடிவு செய்து முயற்சி செய்ததைப் பின்பற்றித்தான் இப்போது நாமும் அவர்களை வரவழைத்து இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். இது ‘சக்சஸ்புல்’ ஆக இருக்கிறது என்பதுதான் அரசின் கருத்து.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளில் அந்தப் பகுதியில் சராசரியாக எவ்வளவு மழை பெய்திருக்கிறது ? இந்த எக்ஸ்பெரிமென்டின் அடிப்படையில் எவ்வளவு மழை பெய்திருக்கிறது ? இதன் காரணமாகச் சென்னை நகருக்கான குடிநீர் நெருக்கடி எந்த அளவுக்கு தீர்ந்திருக்கிறது ? எந்த அளவுக்கு நெருக்கடியைப் போக்க உதவியிருக்கிறது? அதோடு இதைத் தவிர விவசாயத்திற்கு இது எந்த அளவுக்கு உதவியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அதிகமான தகவல்களைப் புள்ளி விவரத்தோடு சொல்ல வேண்டும் என்று தான் இந்த அரசு கருதுகிறது. ஏனென்றால் ரூ. 25 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. இதுபற்றிய முழுமையான அறிக்கை டிசம்பர் மாத இறுதியிலேயே கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்த உடனே தருகிறோம். மழையைப் பொறுத்தவரை மும்மடங்கு பெய்திருக்

இறது என்பது போதாதுதான். இன்னும் விவரமான தகவல்களைக் கொடுக்க வேண்டும். அதைப் பெறுவதற்கான உரிமை இந்த அவைக்கு இருக்கிறது என்பதை தான் ஒப்புக்கொள்கிறேன். எனவே எல்லாத் தகவல் களையும் சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர்கள் மீண்டும் இங்கே வந்திருந்து கேள்வி கேட்டால், நான் அதற்கு ஏற்ப விவரமாகப் பதில் சொல்ல ஆசைப் படுகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த எக்ஸ்பெரி மென்டு நடத்தப்பட்டு ஆறு மாதங்கள் ஆகின்றன. இதற்கான அறிக்கை இங்கேயே தயாரிக்கப்படுகிறதா அல்லது அந்த ரிப்போர்ட்டும் அமெரிக்கா விலிருந்து தயாரிக்கப்படுகிறதா ? ஆறு மாதங்களாகியும்கூட இது குறித்த அறிக்கை வாராததற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இதைத் தனியான துறை ஒன்று நடத்தியது. எனவே அவர்களிடமிருந்துதான் இந்த ரிப்போர்ட்டை எதிர்பார்க்கிறோம். மெட்ரோ வாட்டர் இதைச் செய்ய வில்லை. நேரடியாக அவர்கள் இதைச் செய்யவில்லை. அமெரிக்காவிலிருந்து வந்தவர்கள் இதைச் செய்தார்கள். எனவே அந்த டிபார்ட்மென்டிலிருந்து இதை எதிர்பார்க்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் மிகுந்த அக்கறை யோடு இதை வலியுறுத்திக் கேட்பதன் காரணத்தால், உடனே ஒரு டி.ஓ. லெட்டர் எழுதி அந்த அறிக்கையை அங்கிருந்து எவ்வளவு விரைவில் வர வழைக்க முடியுமோ அவ்வளவு விரைவில் வரவழைக்க ஏற்பாடு செய்யப் படும். மீண்டும் உறுப்பினர்கள் இங்கே வந்து கேள்வி கேட்கிறபோது, இந்தத் தகவல்களையெல்லாம் விரிவாகக் கொடுக்க இயலும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 74 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு பயிற்சி நிலையங்கள்.

*68. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கிராம நிர்வாக அதிகாரிகள் பயிற்சிக்கென, தனியே பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்நிலையங்கள் எங்கெங்கு எப்பொழுதிலிருந்து செயல்படத் தொடங்கும் ?